பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

29 10 2025 7.15

புதன்கிழமை இரவு

ஆகாஷவாணி செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கடல்சார் துறை இதுவரை இல்லாத அளவுக்கு வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பக்கவாதம் தடுப்பு குறித்து கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

- சத்தீஷ்கரில் 59 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

- ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என இந்தியாவும் ரஷ்யாவும் முடிவு செய்துள்ளன.

- ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் ரோஹித் ஷர்மா முதலிடத்தை பிடித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

கடல்சார் துறை இதுவரை இல்லாத அளவுக்கு வளர்ச்சியை கண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று மும்பையில் கடல்சார் உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இந்த மாநாட்டில் 85 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றதை அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்கான உடன்படிக்கைகள் இந்த மாநாட்டில் எட்டப்பட்டதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் கடல்சார் துறை முக்கியப் பங்கு வகித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

கப்பல் கட்டுமானத் துறையில் இந்தியா புதிய உச்சத்தை எட்ட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடல்சார் துறையை வலுப்படுத்துவதற்காக பழைய சட்டங்கள் களையப்பட்டு தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு புதிய சட்டங்கள் கொண்டு வரப்படுவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

>><><><><><<

பக்கவாதம் தடுப்பு குறித்து கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச பக்கவாத தடுப்பு தினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சரியான உணவுப் பழக்கங்கள் மற்றும் உடல் பயிற்சி பக்கவாதத்தை தடுக்க உதவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உடல்நலனை சீராக பராமரிக்க அனைவரும் இந்நாளில் உறுதியேற்றுக் கொள்வோம் என்றும் திரு ஜெ பி நட்டா அதில் குறிப்பிட்டுள்ளார்.

>><><><><><<

புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கான சர்வதேச முனையமாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், புதுமைக் கண்டுபிடிப்புகளுக்கும், புத்தொழில் நிறுவனங்களுக்கும் மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக தெரிவித்தார்.

ஆராய்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதற்காக ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் நிதியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருப்பதாகவும் திரு பியூஷ் கோயல் கூறினார்.

>><><><><><<

அஞ்சலகங்களின் வர்த்தகம் நடப்பு நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் சீரான வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த காலக் கட்டத்தில் 3 ஆயிரத்து 324 கோடி ரூபாய் அளவுக்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக கூறினார்.

இதன்மூலம் நடப்பு நிதியாண்டுக்கான இலக்கில் 80 சதவீதம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தில்லி மற்றும் தெலங்கானா இதில் முன்னிலை வகிப்பதாகவும் அவர் கூறினார்.

அஞ்சலகங்களை நவீனமயமாக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்தார்.

>><><><><><<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளையோர் பாடுபட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற சர்தார் வல்லபாய் பட்டேல் நினைவு சொற்பொழிவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

இரும்பு மனிதர் என்று போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் சிந்தனைகளை பின்பற்றி இளையோர் இந்தியாவின் வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

>><><><><><<

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் ராஷ்டிரிய ஜனதா தளம் தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணித் தலைவர்கள் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

Barh-ல் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், பீகார் வளர்ச்சியை பின்னுக்கு தள்ளியதில் ராஷ்டிரிய ஜனதா தளம் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு முக்கிய பங்கு உள்ளதாக கூறினார்.

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இதனை சரி செய்து பீகாரை வளர்ச்சிப்பாதைக்கு அழைத்துச் செல்வதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி, Sakra -வில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

சமூக நீதியை காக்க பிஜேபி தலைமையிலான கூட்டணி அரசு தவறிவிட்டதாக அவர் குற்றம்சாட்டினார்.

தங்கள் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால் இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் திரு ராகுல்காந்தி உறுதியளித்தார்.

>><><><><><<

சத்தீஷ்கரில் 59 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

இவர்களில் 9 பேர் பெண்கள் என்று அம்மாநில காவல் துறை தெரிவித்துள்ளது.

60 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்த இந்த நக்ஸலைட்டுகள் வன்முறையை கைவிட்டுவிட்டு சரணடைந்துள்ளதாகவும், அவர்களின் மறுவாழ்வுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் பிஜப்பூர் காவல்துறை தலைவர் திரு ஜிதேந்திர குமார் யாதவ் கூறியுள்ளார்.

நக்ஸலைட்டு பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி இதுவாகும் என்றும் அவர் கூறினார்.

எஞ்சியவர்களும் வன்முறையை கைவிட்டுவிட்டு அமைதிப் பாதைக்கு திரும்ப வேண்டும் என்றும் திரு ஜிதேந்திர குமார் யாதவ் கேட்டுக் கொண்டார்.

>><><><><><<

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மின்சார பேருந்துகள் இயக்கப்படுவதாக போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – சிவசங்கர் – 37 செகண்ட்ஸ்)

>><<><><><<

கேரளாவில் Asha பணியாளர்களுக்கான மதிப்பூதியம் ஆயிரம் ரூபாய் உயர்த்தப்படுவதாக அம்மாநில முதலமைச்சர் திரு பினராயி விஜயன் கூறியுள்ளார்.

இன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ரப்பருக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை கிலோவுக்கு 200 ரூபாய் உயர்த்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் ஆயிரத்து 600 ரூபாயிலிருந்து இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

கேரளாவில் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக அடுத்த மாதம் 5 ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு பினராயி விஜயன் கூறினார்.

பிஎம் ஸ்ரீ திட்டத்தில் இணைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் பல்வேறு அச்சங்கள் அதில் எழுந்துள்ளதன் காரணமாக அதனை மறு ஆய்வு செய்வதற்காக அமைச்சரவை துணைக் குழு ஒன்றை ஏற்படுத்தி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஏழு அமைச்சர்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

இக்குழு அறிக்கையை சமர்ப்பிக்கும் வரை இத்திட்டத்தின் செயலாக்கம் நிறுத்தி வைக்கப்படுவதாகவும் திரு பினராயி விஜயன் தெரிவித்தார்.

>><<><><><<

இந்தியா – ரஷ்யா இடையே ராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பணிக்குழு கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

பாதுகாப்புத் துறையில் பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

>><<><><><<

மின்துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவது என இந்தியாவும், நேபாளமும் முடிவு செய்துள்ளன.

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள நேபாளத்தின் மின்துறை அமைச்சர் திரு Kulman Ghasing, மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர் லாலை சந்தித்து பேசிய போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

தூய எரிசக்தி பயன்பாட்டுக்கு ஊக்கமளிப்பது குறித்த அம்சங்களும் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><<><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் ரோஹித் ஷர்மா முதலிடத்தை பிடித்துள்ளார்.

-------------

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Shrivalli Rashmika காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 6-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரனை வென்றார்.

சகஜா எமனப்பள்ளியும் முதல் சுற்று ஆட்டத்தில் 6-4, 6-2 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Priska Madelyn Nugroho-ஐ வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

-------------

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் பாகிஸ்தானுக்கு பதிலாக ஓமன் அணி பங்கேற்கும் என்று சர்வதேச ஹாக்கி சம்மேளனம் அறிவித்துள்ளது.

*இப்போட்டி அடுத்த மாதம் 28 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் மாதம் 10 ஆம் தேதிவரை சென்னை மற்றும் மதுரையில் நடைபெறவுள்ளது.*

--------------------

*ஹைலோ ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 22-20 என்ற செட்கணக்கில் பிரான்சின் Christo Popov-ஐ வென்றார்.*

*இதர ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன் மற்றும் கிரண் ஜார்ஜ் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றனர்.*

*>> End of News <<*